**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051878

1. District மாவட்டம் : CHENNAI PS: காவல்நிலையம் DVAC HQ Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 19/2020 Date: நாள்

2. (i) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102 CrPC
(ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 PC (Amendment) Act
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 12/12/2020 Date to : நாள் வரை 12/12/2020
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 04.00 hrs Time to : நேரம் வரை 08.15 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2020 Time நேரம் 1600 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.12.2020 Time நேரம் 1600 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North West, 70km.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. Palavakkam RTO Check Post Uthukottai, Thiruvallur District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Kamalanathan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் DSO I/C District Civil Supplies Officer (g) Address : முகவரி Kanchipuram, Thiruvallur, Chengalpattu Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. H. Vanaja, Motor Vehicle Inspector (NT), RTO Check Post Palavakkam at Uthukottai, Residing at No.43 South Mada Street, Thiruvanmiyur, Chennai and K. Kalaibabu Office Assistant.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Suspected bribe Money Rs. 72750/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed separate sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : - மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13/12/2020 at 1700 hrs.

Name: பெயர் D. SELVAKKAN DAVID
Rank: நிலை Inspector of Police No. எண் ..........

Special Investigation ...

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.19/2020 பிரிவு 102 கு.வி.மு.ச & 7 ஊழல் தடுப்பு (திருத்தப்பட்டது) சட்டம் 2018. வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு-1 ஆய்வாளர் து.செல்வக்கண் டேவிட், ஆகிய நான் 12.12.2020 அன்று மாலை 16.00 மணியளவில் திரு.R.கமலநாதன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுக் குழு-1 சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து அம்மனுவில் வழக்கு பதிவு செய்து மேல் விசாரணை செய்ய உத்தரவு வழங்கியதன்பேரில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.19/2020 பிரிவு 102 கு.வி.கு.ச & 7 ஊழல் தடுப்பு (திருத்தப்பட்டது) சட்டம் 2018 வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.R.கமலநாதன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16. ந.க.எண்.400/அ1/2020 நாள் 12.12.2020. ஐயா, பொருள், இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை-திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் உள்ள பாலவாக்கம் தமிழக அரசின் போக்குவரத்து துறை சோதனைச்சாவடி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 12.12.2020 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக. காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு குழு-1,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 12.12.2020-ம் தேதி திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் உள்ள பாலவாக்கம் தமிழக அரசின் போக்குவரத்து துறை சோதனைச் சாவடி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூ. 72,750/- (எழுபத்தி இரண்டாயிரத்து எழு நூற்று ஐம்பது மட்டும்), திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் உள்ள பாலவாக்கம் தமிழக அரசின் போக்குவரத்து துறை சோதனைச் சாவடி அலுவலகத்தில் வருகை பதிவேடு அக்டோபர் மாதத்திற்குரிய நகல் எடுக்கப்பட்டது. மேலும் இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள், பணம் ரூ.72,750/-, இத்துடன் (1). திருமதி H.வனஜா, க/பெ. சோரன்செங்குட்டுவன், மோட்டார் வாகன ஆய்வாளர், (2) திரு.க.கலைபாபு, த/பெ கபாலி, அலுவலக உதவியாளர் (3) திரு.K.நரேந்திரன் த/பெ.கண்ணப்பன் ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி 11.12.2020 காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரைக்கான Account Statement-ஐ பார்வையிட்டதில் அதில் ரூ.24,190/- வசூல் செய்யப்பட்டு கணக்கு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 11.12.2020 இரவு 8 மணிமுதல் 12.12.2020 காலை 8 மணிவரைகான Account Statement-ஐ பார்வையிட்டதில் அதில் ரூ.11,390/- வசூல் செய்யப்பட்டு கணக்கு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி Account Statement-ன் சான்றொப்பமிட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம். இணைப்பு- மேற்கண்டவாறு On 12.12.2020 Inspector of Police, Tr.D.Selvakkan David is instructed to register a case & investigate, Sd//V.Baskar, Deputy Superintendent of Police, Received the letter on 12.12.2020 and registered a case in V&AC, Head Quarters, Cr.No.19/2020 u/s

102 Cr.PC & 7 of The Prevention of Corruption (Amendment) Act 2018 Sd//D.Selvakkan David, Inspector of Police,SIC-1,காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் சிறப்பு புலனாய்வுக் குழு-1, காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையிலான குழு ஆகியோர் இணைந்து இன்று 12.12.2020-ம் தேதி அதிகாலை சுமார் 4.00 மணியளவில் சென்னையிலிருந்து ஆந்திர மாநிலம் செல்லும் நெடுஞ்சாலையில், சென்னைக்கு உள் வரும் நெடுஞ்சாலையில் திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் உள்ள பாலவாக்கம் தமிழக அரசின் போக்குவரத்து துறை சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத் தணிக்கை அறிக்கை, இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள். 1. திரு.R.கமலநாதன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம். 2. திரு.V.பாஸ்கரன், காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. 3. திரு.S.செந்தில்குமார், காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. 4. திருமதி.S.மலர்கொடி, காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. 5.திருமதி.J.கிறிஸ்டி, காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. 6.திரு.K.வேணுகோபால், காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. சென்னையிலிருந்து ஆந்திரா செல்லும் நெடுஞ்சாலையில் திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் உள்ள தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின் பாலவாக்கம் சோதனைச் சாவடியில் சென்னைக்கு உள் வரும் மற்றும் வெளி செல்லும் வாகன ஓட்டுனர்கள் மற்றும் ஆட்களிடமிருந்து நேரடியாக கையூட்டு கேட்டு பெற்றுக் கொண்டு ஆவணங்களில் முத்திரையிடுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி சோதனைச்சாவடியில் கூட்டு தணிக்கை

மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த அலுவலகமானது Container–ஆல் வடிவமைக்கப்பட்டது ஆகும். அலுவலகம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அலுவலகத்தில் வடக்கு பகுதில் இரண்டு வாசல்கள் உள்ளன. அலுவலகத்தின் உள்ளே தெற்கு நோக்கிய மேஜையுடன் கூடிய இருக்கையில் திருமதி.எச்.வனஜா, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத), அவர்கள் பணியில் இருந்தார். மேற்படி அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் திரு.கே.கலைபாபு என்பவர் வாகன ஓட்டிகளிடமிருந்த வரி வசூல் செய்யும் கவுண்டரில் அமர்ந்திருந்தார். மேலும் அரசு அலுவலர்கள் அல்லாத இரண்டு நபர்கள் சாலையோரத்தில் நின்று கொண்டு சாலையில் செல்லும் வாகனங்களை ஓரமாக நிறுத்துமாறு சைகை செய்து கொண்டிருந்தனர். ஊழல் மற்றும் கண்காணிப்புத்துறையினரின் வாகனங்கள் சோதனைச் சாவடியில் நின்றதும் அதில் ஒருவர் சோதனைச் சாவடியின் பின்புறம் உள்ள புதர் உள் ஓடி மறைந்து விட்டார். அவர்களை குறித்து திரு.கலைபாபுவிடம் விசாரிக்க அவர்களுடைய பெயர் திரு.கே.நரேந்திரன் மற்றும் டி.ரமேஷ் என்றும் அதில் ஓடி மறைந்தவர் டி.ரமேஷ் என்றும் தெரிவித்தார். அலுவலகத்திலிருந்த வருகைப் பதிவேடு மற்றும் பணக் கையிருப்பு பதிவேடு ஆகியவை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலரால் சோதனை செய்யப்பட்டது. நேற்று (11.12.2020) காலை 8.00 மணி முதல் மறுநாள் 12.12.2020 காலை 8.00 மணி வரை திருமதி.எச்.வனஜா பகல் பணியில் மோட்டாரர் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) மற்றும் திரு.கலைபாபு ஆகியோர் பணியில் இருப்பதாக கையொப்பமிட்டுள்ளனர். பின்பு பணக் கையிருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் நேற்று (11.12.2020) அன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.வனஜா அவர்கள் பணிக்கு வரும்போது ரூ.1,680/- கையில் வைத்திருந்ததாகவும், அலுவலக உதவியாளர் திரு.கலைபாபு அவர்கள் ரூ.2,500/- சொந்தப் பணம் வைத்திருந்ததாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த சோதனைச்சாவடியில் இருந்த மேற்படி நபர்களிடம் மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினர் சோதனை செய்த போது, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எச்.வனஜா அவர்கள் தன்னிடம் சொந்தப் பணம் ரூ.1,680/- வைத்திருந்ததாகவும்

அதில் தனது வீட்டிற்கு பழங்கள் வாங்கிய செலவு மற்றும் மதியம் மற்றும் இரவு சாப்பாட்டு செலவு போக மீதம் ரூ.800/- இருப்தாக தெரிவித்தார். அந்த பணம் தனது சொந்த பணம் என சொல்லி பணத்தை ஆஜர் செய்தார். அது அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அலுவலக உதவியாளர் திரு.கலைபாபு என்பவர் தன்னிடம் சொந்தப் பணம் ரூ.2,500/- வைத்திருந்ததகாவும் தனது சொந்த செலவு போக மீதம் உள்ள பணம் ரூ.1,650/- பணத்தை ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவரிடமே திரும்ப வழங்கப்பட்டது. பின்பு அலுவலகத்தின் உள்ளே உள்ள சீல் போடும் மேஜை கவுண்டரில் உள்ள டிராயர்களை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினருடன் சோதனையிட்ட போது

| Sl.NO. | Denomination | Amount |
|---|---|---|
| 1. | 2000 X 1 | 2000 |
| 2. | 500 X 85 | 42500 |
| 3. | 200 X 48 | 9600 |
| 4. | 100 X 136 | 13600 |
| 5. | 50 X 17 | 850 |
| 6. | 20 X 10 | 200 |
| | **Total** | **68,750** |

மேற்படி ரூ.68,750 தொகை குறித்து திருமதி.எச்.வனஜா அவர்களிடம் கேட்க, அவர்களால் தகுந்த விளக்கம் அளிக்க முடியவில்லை. மேலும் இந்த பணம் அன்றைய தினம் கணக்கில் வராத பணம் என்று தெரிய வந்ததால், இன்று வந்த வாகன ஓட்டுனர்கள் மற்றும் வாகன ஆட்களிடமிருந்து கையூட்டாக பெறப்பட்ட பணம் என கருதி ரூ. **68,750/-** மேல் விசாரணைக்காக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் அலுவலகத்தின் சீல் போடும் கவுண்டரின் முன்பகுதில் உள்ள Barriguard அருகே ரூ.4,000/-ம் (500X 8) சிதறி கிடந்தது. இந்த தொகை ரூ.4,000/- தொகை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலரால் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலத்தில் இருந்த திரு.கே.நரேந்திரன்,

த/பெ.கண்ணப்பன் அவர்களை மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அவர்கள் விசாரிக்க அவர் தான் டிரைவர் தொழில் செய்து வருவதாகவும் ஏற்கனவே இங்கு பணிபுரிந்த மோட்டார் வாகன ஆய்வாளர் சுரேஷ் என்பவர் எனக்கு அறிமுகமானார் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டபடி தான் இங்கு தினக்கூலி வேலைக்கு அவர் அலுவலில் இருக்கும் போது உதவி செய்து வந்ததாகவும். தற்போது அவருக்கு மாற்று பணியாக வரும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தனக்கு அறிமுகமானதாகவும். அவர் மாறுதலில் சென்றவுடன் மற்ற ஆய்வாளர்களுக்கு அலுவலக உதவி செய்ய அவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் உதவி செய்து வருவருதகாவும் தெரிவித்தார். பகல் மற்றும் இரவு அலுவலாக 08.00 மணிமுதல் 08.00 மணிவரை வேலை செய்தால், வேலை முடித்தவுடன் தனக்கு ரூ.300/- முதல் ரூ.500/- வரை தினக்கூலியாக கொடுப்பதாவும் தெரிவித்தார். மாவட்ட ஆய்வு குழும அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். சோதனையின் போது வாகன எண். TN 72 BD 9674 என்ற பதிவெண்ணுள்ள Maruthi Swift Zxi என்ற Silver Colour என்ற கார் சோதனைச் சாவடியின் பின்புறம் நின்றுக்கொண்டிருந்தது. அந்த வாகனத்ததை பற்றி விசாரிக்க அது இந்த அலுவலத்தில் பணிபுரியும் திரு.கே.கலைபாபு என்பவருடையது என்று தெரிவித்தனர். இது பற்றி கலைபாபுவிடம் விசாரிக்க அது தன்னுடைய கார்தான் என்றும் அது தன்னுடைய மனைவி திருமதி.ரேனுகாதேவி பெயரில் உள்ளது எனபதையும் தெரிவித்தார். மேற்படி வாகனத்தை சோதனை செய்ததில் ஒரு சாக்கு பையில் சுமார் 200 வாழைப்பழங்கள் இருந்தது. மேலும் மற்றொரு சாக்கு பையில் சாமந்தி பூக்கள் இருந்தது. அது குறித்து கலைபாபுவிடம் கேட்க தான் அதை பஜாரில் வாங்கியதாகவும் தன் வீட்டிற்கு எடுத்து செல்வதற்காக வாகனத்தில் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். வாகனத்தில் இருந்து ஏதுவும் கைப்பற்றபடவில்லை. ஆய்வுகுழு அலுவலர் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார். சோதனையின் போது மாவட்ட ஆய்வுக் குழும அலுவலர் அலுவலகத்தில் உள்ள ரொக்க பதிவேடு பக்கங்கள் 1 முதல் 170 பக்கங்கள் ஆய்வு செய்ததில் திருமதி.எச்.வனஜா அவர்கள் 11.12.2020 பகல் பணியின் போது காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை வரி மற்றும்

கட்டணம் ரொக்கமாக ரூ.24,190/- இருப்பதாகவும் இரவு 8 மணி முதல் உள்ள பணியில் ரொக்கமாக ரூ.11,390/- இருப்பதாகவும் ஆக மொத்தம் ரூ.35,580/- இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இப்பணத்தை மாவட்ட ஆய்வு குழும அலுவலர் ஆய்வு செய்ய அந்த பணம் ரூ.35,580/-கான கணக்கு சரியாக இருந்ததால் மேற்படி பணத்தை அவர்களிடம் திருப்ப ஒப்படைக்கப்பட்டது. அலுவலில் இருந்த திருமதி.எச்.வனஜா மற்றும் அலுவல உதவியாளர் திரு.கே.கலைபாபு ஆகியோரை மேலே குறிப்பிட்டுள்ள கணக்கில் வராத பணம் ரூ.72,750/- தை பற்றி மாவட்ட ஆய்வு குழும அலுவர் அவர்கள் திருமதி.H.வனஜா மற்றும் திரு.K.கலைபாபு ஆகியோரிடம் விளக்கம் கேட்க மேற்படி பணம் தங்களுடையது இல்லை என்றும் மேலும் அந்த பணம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியதால் மேற்படி கணக்கில் வராத பணம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி ரூ.72,750/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திருமதி.H.வனஜா அவர்கள் பணியில் இருந்த 11.12.2020 காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரைக்கான Account Statement-ஐ மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் பார்வையிட்டதில் அதில் ரூ.24,190/- வசூல் செய்யப்பட்டு கணக்கு முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 11.12.2020 இரவு 8 மணிமுதல் 12.12.2020 காலை 8 மணிவரைகான Account Statement-ஐ மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் பார்வையிட்டதில் அதில் ரூ.11,390/- வசூல் செய்யப்பட்டு கணக்கு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி Account Statement-ன் சான்றொப்பமிட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கை இன்று 12.12.2020 காலை 8.15 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ அலுவலக ஊழியர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்வித இடையூறோ, சேதாரமோ இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது. Sd/xxxxxx திரு.R.கமலநாதன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம். Sd/xxxxxx (V.பாஸ்கரன்) காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்புத்துறை, , சென்னை. Sd/xxxxxx (S.செந்தில்குமார்) காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. Sd/xxxxxx (S.மலர்கொடி) காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. Sd/xxxxxx திருமதி J.கிறிஸ்டி, காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. Sd/xxxxxx திரு.K.வேணுகோபால், காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. Sd/xxxxxx (H.வனஜா) மோட்டார் வாகன ஆய்வாளர் (NT), வட்டார போக்குவரத்து அலுவலகம், பாலவாக்கம் சோதனைச்சாவடி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர், Sd/xxxxxx (K.கலைபாபு) அலுவல உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பாலவாக்கம் சோதனைச்சாவடி, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர்.